**நாணயச் சபை**

**இலங்கை மத்திய வங்கி**

**2020 நவெம்பர் 09** **சுற்றறிக்கை** **2020இன் 11ஆம் இலக்கம்**

---

**கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கான சட்ட இசைவுத்தாமதம்**

கொவிட்-19இன் இரண்டாவது அலையின் காரணமாக வியாபாரங்களினாலும் தனிப்பட்டவர்களினாலும் எதிர்நோக்கப்படும் சவால்களுக்கு ஈடுகொடுக்கச் செய்யும் விதத்தில், இலங்கை மத்திய வங்கி, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளையும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளையும் (இதனகத்துப் பின்னர் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் எனக் குறிப்பீடு செய்யப்படும்) கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்குமான (இதனகத்துப் பின்னர் திட்டம் எனக் குறிப்பீடு செய்யப்படும்) படுகடன் சட்ட இசைவுத்தாமதத்தினைக் கீழே குறித்துரைக்கப்பட்டவாறு 2020 ஒத்தோபர் 01ஆம் நாளிலிருந்து தொடங்கி மேலும் ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்குமாறு பணித்தது.

இதற்கமைய, அனைத்து வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களிடையே ஒரே மாதிரியான விதத்தில் இத்திட்டத்தினை நடைமுறைக்கிடுவதற்காக இச்சுற்றறிக்கை விடுக்கப்படுகிறது. எனினும், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் இச்சுற்றறிக்கையின் கீழ் வழங்கப்படுகின்ற நன்மைகளிலும் பார்க்கக் குறையாத விதத்தில் ஒட்டுமொத்த நன்மைகளைக் கொண்ட வேறேதேனும் மேலதிகச் சலுகைகளையும் கடன்பாட்டாளர்களுக்கு வழங்கலாம்.

1. **சட்ட இசைவுத்தாமதத்தின் காலம் மற்றும் ஏற்புடைத்தன்மை:**

   (அ) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் பணிப்பாளர் சபையினால் அல்லது வேறேதேனும் அதிகாரமளிக்கப்பட்ட சபையினால் வழங்கப்பட்ட உள்ளக வழிகாட்டல்களின் அடிப்படையில், தகைமையுடைய கடன்பாட்டாளர்களினால் எதிர்நோக்கப்படும் நிதியியல் இடர்ப்பாடுகளைப் பரிசீலனையில் கொண்டு, சட்ட இசைவுத்தாமத காலம் 2020 ஒத்தோபர் 1ஆம் திகதியிலிருந்து தொடங்குகின்ற 6 மாத காலத்தினை விஞ்சாததாக அல்லது ஏற்புடைத்தான விதத்தில் அதனையும் விட குறுகிய காலத்தினைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

   (ஆ) சட்ட இசைவுத்தாமதமானது பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களின் கோரிக்கையின் மீது மூலதனம் மற்றும் வட்டி இரண்டிற்கும் வழங்கப்படல் வேண்டும்.

2. **விண்ணப்பத்தினை சமர்ப்பிப்பதற்கான கால அவகாசம்:**

   தகைமையுடைய கடன்பாட்டாளர்கள் சட்ட இசைவுத்தாமதத்திற்கான கோரிக்கையினை எழுத்து மூலமாக அல்லது இலத்திரனியல் ஊடகமூடாக 2020.11.25 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்கள் கோரிக்கையினை விடுப்பதற்கும் சலுகைகள், கால அவகாசம் பற்றி அறிந்து கொள்வதற்குமாக எளிமையான படிவங்களையும் (வன்படிவம்/ மென்படிவம்) மின்னஞ்சல் மற்றும் குறுந்தகவல் செய்திகள் உள்ளிட்ட அச்சிடப்பட்ட அத்துடன்/ அல்லது இலத்திரனியல் ஊடகமூடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான படிவங்களையும் வழங்குமாறு நிதியியல் நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

3. **தகைமையுடைய கடன்பாட்டாளர்கள்:**

   (அ) சுற்றுலா, ஆடை, தகவல் தொழில்நுட்பம், தேயிலை, வாசனைத்திரவியங்கள், பெருந்தோட்டம் என்பன உட்பட நேரடியான மற்றும் நேரடியற்ற ஏற்றுமதியுடன் தொடர்பான வியாபாரங்கள், ஏற்பாட்டு வசதிகளை வழங்குபவர்கள் மற்றும் கொவிட்-19இன் காரணமாகத் தோன்றிய பணி இடையூறுகள் மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முடக்கல் நிலைமைகளினால் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் ஏனைய துறைகள்.

   (ஆ) தயாரிப்பு, நிதியல்லாப் பணிகள், வேளாண்மை (பதனிடல் உட்பட), கட்டடவாக்கம், பெறுமதிகூட்டல் மற்றும் அங்கீகாரமளிக்கப்பட்ட உள்நாட்டு மருந்தாக்கங்களை விநியோகிப்பவர்கள் உட்பட வர்த்தகப்படுத்தல் வியாபாரங்களில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் மற்றும் தனிப்பட்டவர்கள்.

இந்நோக்கத்திற்காக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் என்பது வருடாந்தம் ரூ.1 பில்லியனுக்கும் குறைவான மொத்தப் புரள்வினைக் கொண்ட வியாபாரங்கள் எனக் குறிப்பிடப்படலாம்.

(இ) கொவிட்-19 தொற்றின் காரணமாக அவர்களின் வேலைகளை அல்லது வருமானத்தினை இழந்துள்ள சுயதொழில் வாய்ப்பு வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்கள்.

4. **தகைமையுடைய கொடுகடன் வசதிகள்:**

(அ) 2020.03.31இல் அல்லது அதன் பின்னரான திகதியொன்றில் தொழிற்படுகின்ற வகையிலுள்ள தவணைக் கடன்கள், குத்தகை வசதிகள், அடகுபிடித்தல், மேலதிகப் பற்றுக்கள் போன்ற கொடுகடன் வசதிகள், வர்த்தக நிதிகள் அல்லது வேறேதேனும் கொடுகடன் வசதிகள்.

(ஆ) கொடுகடன் அட்டை வசதிகளைப் பொறுத்தவரையில், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள், தகைமையுடைய கடன்பாட்டாளரினால் செய்யப்படும் ஏதேனும் கோரிக்கைக்கு வசதியளிக்கின்ற விதத்தில் பொருத்தமான வியாபாரத் தீர்மானங்களை எடுக்கலாம்.

5. **சட்ட இசைவுத்தாமதத்தினை ஒழுங்கமைத்தல்:**

(அ) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் 2020 ஒத்தோபர் 1ஆம் நாளிலிருந்து 2021 மாச்சு 31 வரையான அல்லது ஏற்புடைத்தான விதத்தில் அதற்கும் குறைவான சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் செலுத்தப்பட வேண்டிய முதலையும் வட்டியையும் தவணைக் கடனொன்றிற்கு மாற்றிக் கொள்ளுதல் வேண்டும்.

(ஆ) மேலதிகப் பற்று போன்ற கொடுகடன் வசதிகளைப் பொறுத்தவரையில் கடன்பாட்டாளர்கள் காலாந்தர அடிப்படையில் வட்டியைச் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்குமிடத்து, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் 2020 ஒத்தோபர் 1ஆம் நாளிலிருந்து 2021 மாச்சு 31 வரையான காலப்பகுதியில் அல்லது ஏற்புடைத்தான விதத்தில் அதற்கும் குறைவான சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் செலுத்தப்பட வேண்டிய வட்டி தவணைக் கடனொன்றிற்கு மாற்றிக் கொள்ளுதல் வேண்டும்.

(இ) அடகுபிடித்தல் வசதிகளைப் பொறுத்தவரையில், சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் செலுத்தப்பட வேண்டிய தவணைத் திகதிகள் 2021 ஏப்பிறல் 1ஆம் திகதி வரை நீடிக்கப்படல் வேண்டும்.

(ஈ) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மாற்றப்பட்ட கடனுக்கான வட்டி வீதமாக, 2021 ஏப்பிறல் 1ஆம் திகதியளவில் கிடைக்கத்தக்கதாக இருக்கும் 364 நாட்கள் திறைசேரி உண்டியலுக்கான பிந்திய ஏல வீதத்தினை விஞ்சாததொரு வீதத்துடன் ஆண்டொன்றிற்கு 5.5 சதவீதத்தினையும் கூட்டிய வீதமொன்றினை விதிக்கலாம். எனினும், இது ஆண்டொன்றிற்கு 11.5 சதவீதத்தினை விஞ்சக்கூடாது.

(உ) அத்தகைய மாற்றப்பட்ட கடன்களை மீளச்செலுத்தும் காலம் குறைந்தபட்சம் இரண்டாண்டுகளாக இருத்தல் வேண்டும் என்பதுடன் மீள்செலுத்தல்கள் 2021 ஏப்பிறல் 01ஆம் திகதியிலிருந்து ஆரம்பமாதலும் வேண்டும். எனினும், கடன்பாட்டாளர்கள் கடன்களை இரண்டாண்டிற்கும் குறைவான காலப்பகுதியில் மீளச்செலுத்த விரும்புவாராயின் அல்லது வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் நீண்ட காலத்தினை வழங்க விரும்புமிடத்து, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் அத்தகைய கோரிக்கைக்கு வசதியளிக்கலாம். மீளச்செலுத்தும் காலம் குறித்துரைக்கப்பட்ட இரண்டாண்டு காலப்பகுதியிலிருந்தும் வேறுபடுமிடத்து வட்டி வீதம் தொடர்பில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களும் கடன்பாட்டாளரும் ஒரு இணக்கப்பாட்டிற்கு வருதல் வேண்டும்.

(ஊ) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் ஒன்றுசேர்ந்த தண்ட வட்டி வீதங்கள் ஏதேனும், 2020 ஒத்தோபர் 1இல் செலுத்தப்படாதிருக்குமாயின் அவற்றினைத் தள்ளுபடி செய்துவிடல் வேண்டும். சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் தண்ட வட்டி வீதங்கள் ஒன்றுசேர்க்கப்படவோ விதிக்கப்படவோ கூடாது.

(எ) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் சட்ட இசைவுத்தாமதத்திற்கு ஒப்புதலளிப்பதற்கு முன்னதாக அத்தகைய சட்ட இசைவுத்தாமத வசதிகள் பற்றி தகைமையுடைய கடன்பாட்டாளர்களுக்கு தெளிவூட்டுதல் வேண்டும்.

6. **சட்ட இசைவுத்தாமதம் தொடர்பான கணக்கீட்டுப் பரிசீலனைகள்:**

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் சட்ட இசைவுத்தாமதத்திற்கான கணக்குகளை இலங்கை கணக்கீட்டு நியமங்களின்படியும் மற்றும் கொவிட்-19 நோய்த்தொற்றின் கீழ் நிதியியல் அறிக்கையிடல் சிக்கல்கள் தொடர்பில் இலங்கை கணக்கீட்டு நியமத்தினால் வழங்கப்பட்ட ஏதேனும் மேலதிக வழிகாட்டல்களுக்கு ஏற்பவும் பரிசீலித்தல் வேண்டும். இது தொடர்பில், நிதியியல் நிறுவனங்களுக்கு மேலதிக வழிகாட்டல்கள்/ தெளிவுபடுத்தல்கள் தேவைப்படுமிடத்து இலங்கை கணக்கீட்டு நியமங்களையும் கணக்காய்வாளர்களையும் நாடலாம்.

7. **அறிக்கையிடும் தேவைப்பாடு:**

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் அவற்றின் கடன்பாட்டாளர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் இசைவுத்தாமதம் தொடர்பான விபரங்களை 2020.12.15 இலிருந்து ஒவ்வொரு மாதமும் 15 மற்றும் 30ஆம் திகதிகளிலுள்ளவாறான விதத்தில் 5 வேலை நாட்களுக்குள் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும். அறிக்கையிடும் படிவம் காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

**பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்**
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்